உலகே உனக்கு கண்ணில்லையா
எங்கள் தமிழீழ மண் என்ன மண் இல்லையா
உலக மக்கள் தான் மக்களா
எங்கள் தமிழீழ மக்கள் என்ன கற்களா

உலகே உனக்கு கண்ணில்லையா ............

எங்கள் தாய் மண்ணின் அடிமை நிலை கண்டும் நீ ஏன் தூங்கினாய்
எங்கள் தாய் மக்களை அழித்த பகைவனை ஏனோ தாக்கினாய்
தமிழீழம் இழிவானதா எங்கள் தன்மாம் மலிவானதா

உலகே உனக்கு கண்ணில்லையா ............

பாலஸ்தீனர்கள் துடித்தபோது அவர்பக்கம் நீயிருந்தாய்
ஈழத்தமிழர்கள் நாளும் மடிகிறோம் ஏனோ எமை மறந்தாய்
தமிழீழம் இழிவானதா எங்கள் தன்மாம் மலிவானதா

உலகே உனக்கு கண்ணில்லையா ............

பள்ளியில் வாழும் பிள்ளைகள் தலையிலும் பாயும் குண்டுகள் பார்
கொள்ளை நீதிகள் சொல்லும் உலகே உன் குரலைப் பறித்தது யார்
தமிழீழம் இழிவானதா எங்கள் தன்மாம் மலிவானதா

உலகே உனக்கு கண்ணில்லையா ............

கொலைஞர் சிங்களர் படைக்கு ஆயுதம் நீயே கொடுப்பதா
புலிகள் அறப்போரை வாழ்த்த மறந்து நீ வசைகள் கொடுப்பதா
தமிழீழம் இழிவானதா எங்கள் தன்மாம் மலிவானதா

உலகே உனக்கு கண்ணில்லையா ............

இசைத்தட்டு : நெருப்பில் நீராடுவோம்
பதிப்பகம் : அகம்